சைவசமய வார இதழ்.

Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞு (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- குரோதிஞு புரட்டாதிமீ கூ௨ வெள்ளிக்கிழமை (25 September. 1964) [இல-உரு]

## விரதம்

[சைவப்பெரியார், திரு. சு. சிவபாதசுந்தரம், B. A. அவர்கள்]

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற் குரு"

விரதமாவது ஆன்மஈடேற்றத்தின் பொருட்டு இன்ன தருமஞ் செய்ய வேண்டியதென்றும் இன்ன பாவம் ஒழிக்க வேண்டியதென்றும் தத்தம் சத்திக்குப் பொருந்தும்படி வரையறுத்துக் கொள்ளப்படுவதாம். விரதம் நோன்பு என்பன ஒருபொருட் சொற்கள். விரதத்தால் மனம் புத்தி முதலான உட்கருவிகள்பரிசுத்தமடையும். அவை பரிசுத்த மாயவழி, பிறவிப் பெருங்கடலை நீந்த ஏது உண்டாகும்; அதனால் இறுதியில் முத்தியும் சித்திக்கும். ஆதலால் ஞானங் கைகூடுவதற்குச் சாதனம் விரதம் என்பது சொல்லாமலேயமையும்

### விரதம் இருவகைத்து

இனி விரதம், நித்தியம், நைமித்தியம் என இரண்டு வகைப்படும். நித்திய விரதங்களாவன:— அருளுடைமை, இன்னு செய்யாமை, கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, வாய்மை, கூடாவொழுக்க மின்மை, கோபமில்லாமை, தவம் முதலியன. மேற்கூறியவற்றுள் அருளுடைமையே மிகச் சிறந்தது; இது மற்றைய விரதங்களுக்கெல்லாம் அடிப்படையாயுமுள்ளது அருளுடைமையாவது யாதென்று ஆராயப் புகின் அது சுயநலங் கருதாமல் இயல்பாகவே எல்லாவுயிர்கள்மேலும் செல்வதாகிய இரக்கத்தையும் அன்பையுமுடைமைஎன்பது பெறப்படும். இக் கருணையை நாம் வளர்க்கும் நிமித்தம் அதனைக் கெடுப்பது யாதென்று முதலில் ஆராயவேண்டும். ஆராய்ந்து அதனை அறவே ஒழிக்க உபாயந்தேட வேண்டுவது அவசியம் எம்மாராய்ச்சியில் புலாலுண்ணல், கூடாவொழுக்கம், கோபம் ஆகிய மூன்றுமே அருளுக்குச் சத்துரு என்று கண்டோம். இதன் உண்மை பின் வரும் வாக்கியங்களாலும் தெளியப்படும். "அருளாட்சியாங்கில்லை ஊன் தின்பவர்க்கு", "நோன்பென்பது கொன்றுதின்னாமை" "கொலலா விரதம் குவலயமெல்லா மோங்க", பூசை யென்பது... ......ஆசை கோபம் அகந்தை அடக்கியே நீச ஐம்பொறி நெஞ்சுள் நிறுத்தியே ஈசனைத் தன் இதயத்துக் காணடவே' ஆதலால் நாம் மேற்கூறிய் பூர்வங்களை விலக்க முயல வேண்டும். அப்படிச் செய்யாவிடின் இறைவனது திருவடிகளாகிய கருணைமா கடலில் யாம் திளைப்பது யாங்ஙனம்?

### உபவாச விரதம்

நைமித்திய விரதங்களாவன உபவாச விரதங்களாம். உபவாசமாவது மனம் பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மன வாக்குக் காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேஷமாகவழிபடுதலாம். சிலகாலங்களிலே திருவருள் நுகர்ச்சி அதிகமுண்டு. இக்காலங்கள் தாம் விரதகாலங்கள் என்று கொள்ளப்படுவன. நித்திய விரதம் நைமித்தியத்திற்கு இன்றியமையாதது, நைமித்தியத்தை மாத்திரம் கைக்கொண்டு நித்தியத்தைப் புறக்கணிப்பது பேதைமையாகும். சில மனுஷர்கள் உபவாச காலங்களில் மாத்திரம் மச்சமாமிசம் புசித்தலை ஒழித்து மற்றக் காலங்களில் பழையபடி உண்கின்றார்கள். தீயதென்று கண்டறிந்து தானே அவ்வுணவை உபவாச காலங்களில் விலக்குகின்றார்கள். அக்காலங்களில் ஆகாதது மற்றக்காலங்களில் ஆவது எங்ஙனம்? இதைச் சிறிதேனும் சிந்திப்பாராக, நிற்க.

உபவாச விரதங்களுடன் சிவபூசை, ஆலயவழிபாடு, மாகேசுரபூசை, திருவிளக்கேற்றல், சிவாலய தொண்டு, சிவனடியார் தொண்டு, அவ்வவ் விரத மூர்த்தியின் மூல மந்திர செபம், பஞ்சாட்சர செபம், திருவருட்பாப் பாராயணம் முதலியன செய்வது விசேஷம். "நன்று நோக்கிலென் பட்டினி யாகிலென் குன்றமேறி யிருந்தவஞ் செய்யிலென் சென்று நீரிற் குளித்துத் திரியிலென், என்றுமீசன் என்பார்க்கன் றியில்லையே" என்னுந் தேவாரம் இங்குக் கவனிக்கத் தக்கது. உபவாச விரதங்கள் உபாசனு மூர்த்தத்திற்கேற்ப சிவவிரதம், தேவி விரதம், விநாயக விரதம், சுப்பிரமணியவிரதம், வைரவ விரதம், வீரபத்திர விரதம் எனப் பலவகைப் படும்.

சிவ விரதமாவன:- திங்கட்கிழமை விரதம், திருவாதிரை விரதம், உமாமகேசுர விரதம், சிவராத்திரி விரதம், கேதார விரதம், கலியாண சுந்தரவிரதம், சூலவிரதம், இடபவிரதம் என எட்டாம். பிரதோஷ விரதமும் இதில் அடங்கும்.

தேவிவிரதம்:- வெள்ளிக்கிழமை விரதம், ஐப்பசியுத்தரவிரதம், நவராத்திரிவிரதம் என மூன்றும்.

விநாயகவிரதம்:- வெள்ளிக்கிழமை விரதம், விநாயகசதுர்

தொடர்ச்சி 2-ம் பக்கம்

## நற்சிந்தனை

(இல்வாழ்க்கை)

தானந் தவமிரண்டுந்
தானுற்ற வல்லது
ஞானவற மென்னலாம் நன்கு.

## கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சமய பாடப் பரீட்சை

—()—

கொழும்பு விவேகானந்த சபையாரால் நடத்தப்படும் சமய பாடப் பரீட்சை இலங்கையில் எப்பாகங்களிலும் 15-11-64-ல் அன்று நடைபெறும். பல வித்தியாசாலை அதிபர்களதும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளதும் விருப்பத்துக்கிணங்க மனுப்பத்திரங்கள் 30 – 10 – 64 வரை பெற்றுக் கொள்ளப்படும்.

—:—

## சஞ்சலம் தீர்த்தருள்!

( அளவையூர் — சஞ்சீவி )

இராகம்: பூபாளம் தாளம்: ஆதி.

பல்லவி

அம்பலந் தன்னில் அனுதின மாடும்
அரகர மாதே வா — சிவசிவ (அம்)

அநுபல்லவி

அம்பிகை சுந்தரி அருகினி லாட
அண்டச ராசரங்கள் அசைந்துநின் ருட (அம்)

சரணம்

வன்னிகொன்றை கதிர் மதிதுடி நாகம்
மணிநீ றணிந்துயர் வானவர் யாகம்
தன்னை நயந்திடும் தண்டலைக் கோனே
சஞ்சலம் தீர்த்தருள் தருசிவ மானே (அம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துசமயம்: ஜி. ஸி. ஈ.

## மாதிரி வினா விடைகள்

[ ஆசிரியர் திரு. ஆ. நவரத்தினம் அவர்கள் ]

[ சுருக்கமாக விடைதருக ]

1. செல்வத்துட் செல்வமெது?

செல்வத்துட் செல்வமாவது அருளால் வருஞ் செல்வமாகும்.

2. இருள் சேர்ந்த இன்னுவலகம் புகல் யாருக்கு இல்லை?

அருள்சேர்ந்த நெஞ்சினை உடையவர்களுக்கு இருள் சேர்ந்த இன்னுவுலகம் புகல் இல்லை.

3. தன்னுயிரஞ்சும் வினை யாருக்கு இல்லை?

நிலைபெற்ற உயிர்களைப் பாதுகாத்து, அருளுடையனுய் வாழுகின்றவனுக்குத் தன்னுயிரஞ்சும் வினை இல்லை.

4. உடல் சுவை யுண்டார் மனம் எது போன்றது?

கொலை செய்யும் கருவியைக் கையிற்கொண்டவரது மனம் போன்றிருக்கும் உடல் சுவை யுண்டாரது மனம்.

5. யாரை அளறு அண்ணுத்தல் செய்யாது?

உயிர் நிற்றற்கு இடமாயுள்ள ஊனை எவன் கொன்று உண்கின்ருனே அவனை அளறு அண்ணுத்தல் செய்யாது.

6, யார் உயிரில் தலைப்பிரிந்த ஊனை உண்ணர்?

மயக்கமாகிய குற்றத்தினின்றும் நீங்கிய (தூய) அறிவினையுடைய மேலோர் உயிரில் தலைப்பிரிந்த ஊனை உண்ணர்.

7. ஆயிரம் வேள்வி செய்தலினும் மேலான அறம் எது?

ஓர் உயிர் நிற்கின்ற உடலை அவ்வுயிரினின்றும் பிரித்து உண்ணுதிருத்தலாகிய அறமானது ஆயிரம் வேள்வி செய்தலினும் மேலானது.

8, எல்லாவுயிரும் யாரைக் கைகூப்பித் தொழும்?

ஓர் உயிரைக் கொல்லாதவனுமாய்ப் புலாலை உண்ணுகவனுமாய் உள்ளவனையும், தவமாகிய தன் கருமத்தைச் செய்து தனது உயிரைத் தனக்குரியதாகப் பெற்றவனுமாய் உள்ளவனையும் எல்லா உயிருங் கைகூப்பித் தொழும்,

9, இல்லறத்தான் தவத்தை மறந்தமைக்குக் காரணம் யாது?

இல்லறத்திலே நிற்போன் துறந்தவர்க்குச் செய்யவேண்டிய (இல்லற) தர்மங்களான உண்டி, மருந்து, உறைவிடம் என்பவற்றை உதவுதலினுல் தவஞ் செய்தலை மறந்தான் என்பர்.

10. தவத்தால் வரக்கடவது யாது?

தம் அறத்திற்குப் பகையாய் நின்று அழிவு செய்தாரைக் கெடுத்தலும், அதனை உவந்தாரை உயர்நிலைப்படுத்தலும் ஆகிய இவ்விரண்டும் தவஞ் செய்பவர்க்கு நினைத்தமாத்திரத்தே வரக்கடவ செயலாகும்.

11. கூடாவொழுக்கம் பற்றித் திருவள்ளுவர் கூறும் கருத்தினை உமது உரைநடையில் தொகுத்தெழுதுக:

கூடாவொழுக்கம்

கூடாவொழுக்கமாவது தவத்தோடு பொருந்தாததாகிய வொழுக்கமாகும். இது தாம் வெறுத்தவிட்ட சிற்றின்பத்தை மனவலிமையில்லாமையால் மீண்டும் அடைய விரும்பி அவ்வழியை நாடிச் செல்வதாகிய தீய வொழுக்கமாகும்.

காம உணர்ச்சியானது தன் மனத்தினிடத்தே தோன்றி வருத்திக்கொண் டிருக்கவும், அவ்வுணர்ச்சியானது தன்னிடத்தே இல்லாமை போலக் காட்டி வஞ்சித்து வாழும் துறவியின் களவொழுக்கத்தைக் கண்டு, அவனது உடம்பாய்க் கலந்து நிற்கின்ற ஐம்பூதங்களும் தமக் குள்ளே சிரிக்குமாம். தான் குற்றமென்று அறிந்த செயலிலே செல்லும் மனத்தையுடையவனது தவவேடமானது அவனுக்கு யாதொரு பயனையும் கொடாது. மனத்தைத் தன் வயப்படுத்தி அடக்கும் வல்லமை யில்லாதவன் தவவேடம் பூண்டு தீவினை புரிதல் பசு புலியின் தோலைப் போர்த்துக்கொண்டு பயிரை மேய்ந்தாற் போன்றது. இன்னும் தவ வேடத்தில் மறைந்து நின்று பிறன் மனைவியை இச்சித்துப் பாவ காரியங்களைச் செய்யுந் துறவிகள் பற்றை மறைவில் பதுங்கி நின்று பறவைகளைப் பிடிக்கும் வேடுவர்களைப் போன்றவர்களாவர். இவர்கள் அகப்பற்றுப் புறப்பற்று ஆகிய இருவகைப் பற்றையும் விட்டோமென்று கூறிக்கொண்டு செய்யுந் தீச்செயல்கள் அவர்களுக்கு, என் செய்தோம்! என் செய்தோம்!! என்று இரங்கும் வகையில் பல

தொடர்ச்சி 3ம் பக்கம்

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

குரோதி ஸு புரட்டாதி மீ
கூ௨ வெள்ளிக்கிழமை

## உயர்தரக் கல்வியைச் சீர்ப்படுத்துக

அண்மையில் வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பிய பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் ஸேர். நிக்கோலஸ் அட்டிக்கல அவர்கள் ஷை கழகத்தில் அடுத்த மாதம் மாணவர்களைச் சேர்ப்பதற்கு இடநெருக்கடி அதிகமாக விருக்குமென எச்சரித்திருக்கிறார். இப்பொழுதே அனேக மாணவர் வெளியில் உறவினர் வீடுகளிலும் விடுதிகளிலும் கஷ்டமான நிலையில் வசித்துப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கல்விபயில்கின்றார்கள். அவர்களுக்கு நூல்நிலையங்களை உபயோகித்தல், பேராசிரியருடன் கலந்துரையாடல், விளையாட்டுகளில் பங்குபற்றுதல் மாணவர் சங்கங்களில் அங்கத்துவம் வகித்தல் முதலிய வசதிகள் கிடையா. அவ்விதமான சூழ்நிலையில் வசித்துக்கல்வி பயிலும் மாணவர்கள் பல்கலைக் கழகத்தினுல் பெறக்கூடிய முழுநன்மைகளையும் பெறமாட்டார்கள். அடுத்த ஆண்டு வெளியிடங்களில் வசித்துக் கல்வி பயிலும் மாணவர்கள் தொகை மேலும் அதிகரிக்கும். பல்கலைக்கழக விடுதிகளில் சேரத் தகுதியுள்ள மாணவர்கள் தொகையும் அதிகரிக்கும். இவ்விதமாக நேரும் நெருக்கடியையே துணை வேந்தர் காலத்துடன் அறிவித்திருக்கிறார்.

இலங்கையிலுள்ள வித்தியோதய சர்வகலாசாலையும் வித்தியாலங்காரச் சர்வகலாசாலையும் பௌத்த மதத்தை யனுட்டிக்கும் சிங்கள மாணவர்களுக்கும் பிக்குமாருக்குமே பயன்படக்கூடியன. குறித்த நெருக்கடியினுல் பெரும்பாலும்பாதிக்கப்படுபவர் தமிழ மாணவர்களே. இப்பொழுது அரசாங்கம் அனுசரிக்கும் இனப்பாகுபாட்டினுல் மாணவர்கள் இனவிகிதப்படியே பெரும்பாலும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அநுமதிக்கப்படுகின்றனர். அதன் காரணமாகத் தகுதியுள்ள தமிழ் மாணவர்கள் பலர் அங்கு சேர முடியாமலிருக்கின்றனர். தமிழ் மாணவர்கள் தங்கள் உயர்தரக் கல்வியைப் பெறுவதற்கு அரசாங்கம் இரண்டு வழிகளைக் கையாளலாம். ஒன்று தமிழ்மாணவர்களைப் பாரத நாட்டிலுள்ள சர்வ கலாசாலைகளிலும் இங்கிலாந்திலுள்ள சர்வகலாசாலைகளிலும் கல்வி பயில அநுமதிகொடுத்தல். மற்றையது ஸேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் தாபித்த இராமநாதன் கல்லூரியிலும் பரமேஸ்வரக் கல்லூரியிலும் அவருடைய ஞாபகமாக உடனடியாக ஓர் இந்துப் பல்கலைக கழகத்தை நிறுவுதலாகும்.

மாணவர்களைப் பிறநாட்டுச் சர்வகலாசாலைகளில் கல்விபயில அநுமதிப்பதினுல் வெளிநாட்டுச் செலவாணி யதிகரிக்குமென அரசாங்கம் கூறக்கூடும். மாணவர்களுடைய அறிவு வளர்ச்சியை மேலாக மதித்து அவர்களுக்கு அவ்விதமான முறையில் கல்வி பயில அநுமதியளித்தல் தர்மமாகும். 'பிச்சை புகினும் கற்றல் நன்றே' என்ற வாக்கியத்தின் பிரகாரம பண நெருக்கடியைக் கருதாமல் பிறநாடுகளில் கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்கு இச்சலுகையை உதவ அரசாங்கம் முன் வருமென எதிர்பார்க்கின்றோம்.

முன்னர்க்கூறிய இந்துச் சர்வகலாசாலையை யாழ்ப்பாணத்தில் நிறுவுதற்கு அரசாங்கம் ஏற்கனவே தீர்மானஞ் செய்து திட்டமும் தயாரித்துள்ளதெனவும் இவ்வருடம் அக்டோபர் மாதம் அது ஆரம்பிக்கப்படுமெனவும் செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்தமையை யாவருமறிந்து சந்தோஷமடைந்தார்கள் ஆனல் குறித்த சர்வகலாசாலை இப்பொழுது யாழ்ப்பாணத்தில் நிறுவப்படுவதாக ஒரு வதந்தியுங் கிடைக்கவில்லை. அரசாங்கம் செய்துள்ள அத்தீர்மானத்தை விரைவில் நிறைவேற்றுதல் தமிழ மாணவர்களுக்குப் பெரும நன்மையைத்தரும், பேராதனைச் சர்வகலாசாலையிலுள்ள நெருக்கடியைக் குறைக்கவும் அது பெருந் துணையாகவிருக்கும். தமிழருடைய கலாச்சாரமும், இந்துசமயமும் காப்பாற்றப்பெறும்.

—0—

## விரதம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

த்தி விரதம், விநாயக சஷ்டி விரதம் என மூன்றும்.

சுப்பிரமணியவிரதம்:வெள்ளிக்கிழமை விரதம், கார்த்திகை விரதம், கந்தசஷ்டிவிரதம் என மூன்றும்.

வைரவவிரதம்:செவ்வாய்க்கிழமைவிரதம், சித்திரைப்பரணிவிரதம்,ஐப்பசிப்பரணி விரதம் என மூன்றும்.

வீரபத்திர விரதம்: செவ்வாய்க்கிழமை விரதமென ஒன்றேயாம்.

அனுஷ்டிக்கும் முறை

விரதம் நோற்பவர் காமம், கோபம் முதலிய குற்றங்களைப் பற்றறக் களைதல் வேண்டும். ("காப்பது விரதம்" என்பது ஔவையார் வாக்கு) தவறாது விடியுமுன் நித்ரைவிட்டு எழல்வேண்டும். எழுந்து புண்ணிய தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்த பின்பு தியானம், செபம், பூசை, ஆலய தரிசனம, புராணபடனம் முதலியன விசேஷமாகச் செய்தல் வேண்டும் திருக்கோயிலிலே இயன்றமட்டும் நெய்விளக்கேற்றல் வேண்டும். அபிடேகத்திரவியம், நைவேதத்தியத் திரவியங்கள் கொடுத்தல் வேண்டும். போசனம் பண்ணும்போது சிவனடியார் ஒருவரோடாயினும் உடனிருந்து உண்ணல் வேண்டும். இரவிலே நித்திரை செய்யும்போது மிகப் பரிசுத்தராய்க் கடவுளைச் சிந்தித்த வண்ணம் தரையில் படுத்துறங்கி அதிகாலையில் எழுந்துவிடல் வேண்டும். உபவாச தினத்திற்கு முந்தின தினத்திலே ஒருபொழுதுதான் போசனம செய்தல் வேண்டும. உபவாச தினத்திற்குப் பிந்தின நாட் காலையிலே மாகேசுர பூசை செய்து இனத்தவர்களோடு பாரணம் பண்ணல் வேண்டும். பாரணம் பண்ணியபின் பகலிலே நித்திரை செய்யாது சிவபுராணங்களைக் கேட்டுக்கொண்டிருத்தல் வேண்டும். விரத காலத்தில் உபாசமிருப்பது உத்தமம், அது கூடாதவிடத்து ஒருபொழுது போசனம் செய்யலாம். மற்றைப் பொழுது பாலேனும். பழமேனும், பலகாரமேனும் உட்கொள்ளலாம்,

விரதத்தைக் கிரமப்படி அனுசரிக்கக்கூடாதவர் தம் மாலியன்றளவு அனுசரிப்பதே தகுதி. ஏனென்றால் தம் மளவுக்கு மீறித் தேகத்தை வருத்தப்படுத்த நேரிடின் அவர்களுக்கு விரதத்தில் வெறுப்புத் தோற்றும். இதனுல் விரத பலன் இல்லாமற் போய்விடும்,

பலன்

விரதத்தால் அடையும் பலன் காமியம் நிஷ்காமியம் என இருதிறப்படும். காமியமாவது இம்மைப் பிரயோசனங்கருதி அனுஷ்டிப்பது அதாவது விரதம் நோற்பதால் தாம் தாம் வேண்டியவற்றைப் பெறுவது. விரதத்தால் கடன், வறுமை, நோய், பயம் முதலான நீங்கப்பெறுதல் உலகப் பிரசித்தம், "வேண்டினுர் வேண்டியதே யீவான்கண்டாய்", "வாயானை மனத்தானை மனத்துணின்ற கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் ... திருப்பாசுர அடிகள் 'தம்மடியவர் குறைவு தீர்த்தாண்டருள்வதே விரதமாகப் பூண்டுள்ளார் சிவபிரான்' என்பதை நன்கு விளக்கும். இம்மைப் பயன்கள் அநித்தியமும், மேலும் மேலும் ஆசையை உண்டாக்குவன வாதலால் நிஷ்காமியமே சிறந்தது. ஆயினும் யாதொரு பலனுங் கருதாது நோற்கப்படும் விரதமே மிகச் சிறந்ததாகும்.

"வேண்டுங்கால வேண்டும்
பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்"

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## கச்சியப்பசிவாசாரியாரின் கற்பனுசக்தி

—:0:—

## பேரிருள் தாருகாவனமொத்தது செக்கர் வானம் ஈசனை யொத்தது

தாருகா வனம் என்னும் காட்டில் பல முனிவர்கள் இருந்தார்கள். அவர்கள் யாகம், விரதம் முதலியவற்றை அநுட்டித்து வந்தார்கள். ஆனல் அவர்களில் ஒரு குறைவு இருந்தது. அவர்கள் முழுமுதற் கடவுளாகியசிவபெருமானை நினைத்து இவ்விரதங்களைப் புரிவதில்லை. விரதங்களும் யாகங்களுமே முத்தியைத் தருமென நம்பினுர்கள். இறைவனை நினையாமற் செய்யும் புண்ணியங்களினுற் பலனில்லை என்பது சைவ சித்தாந்தத் துணிபு இந்த உண்மையை இவர்களுக்கு விளக்கநினைத்தார் இறைவன் மாயோனை மோகினிப் பெண் வடிவத்துடன் தாருகா வனத்திற்குச் செல்லும்படிசெய்தார். தான் பிட்சா பாத்திரத்தைக் கையிலேந்தி தாருகா வனத்து முனிவர்கள் மனைதோறும் பலிக்காகச்சென்றார். இதனுல் முனிவரின் மனைவிமார்கள் யாவரும் இறைவனது திருக்கோலத்தைக் கண்டு காதலித்து தமது கற்பொழுக்கம் நீங்கப்பெற்றார்கள் இவ்வாறே முனிவர்களும் மாயோனுகிய மோகினிப் பெண்ணைக் கண்டு தம விரத ஒழுக்கங்கள் நீங்கப்பெறறாாகள.

மாலைநேரம மேற்குவானம் எங்கும் செவ்வொளி படருகிறது. ஏனைய இடமெங்கும இருள் பரவுகிறது. வானம எங்கும் நட்சத்திரங்கள் தோற்றுகின்றன செவ்வானத்தில இளம் பிறையும் தோற்றுகின்

ஸ்ரீ வ. குகசர்மா

றது, இம்மாலைக் காட்சியை காணகிறார் கந்தபுராண ஆசிரியர்கச்சியப்பர். ஈசனை எண்ணுதார் நெஞ்சம் இருளடைநதிருக்கும். அவ்வாறு மாயை யிருளால் மூடப்பட்ட மனத்தையுடைய எண்ணுயிரம் முனிவர்கள் தாருகவனத்தி லிருந்தார்கள். ஒரு நாடு புகழ்பெறுவதும் இகழப்படுவதும் அங்கிருக்கும் மக்களின் தன்மையையே பொறுத்தது. இந்த உண்மையின் படி பார்த்தால மாயையிருளால மூடப்பட்ட மக்களிருக்கும் தன்மையால் அவ்வனமே இருளால் மூடப்பட்டிருப்பதாகத் தோற்றுகிறது. எனவே விசும்பிற் றெக்க பேரிருள் தாருகாவனத்தை யொத்திருப்பது புலவர்மனதில்ஞாபகமூட்டுகிறது நட்சத்திரம்பெண்களின்தோற்றம்போல் தெரிகிறது. அருளுடையார்க்குப் பார்க்குமிடமதோறும் பரம் பொருளே காட்சியளிக்குமெனபர். அவ்வாறேமாலைச்செக்கர் இறைவனுகவும் இளம் பிறை இறைவன கையில் உள்ள பிட்சாபாத்திரமாகவும் புலவருக்குத் தோற்றுகின்றன தாம் அடைந்த இன்பத்தை வையகமும் பெறுமபடி அதனை ஓர் செய்யுளாக்கி விடுகிறார்,

"மிக்க தாருக வனத்தினை
யொத்தது விசும்பில்
தோக்க பேரிருள் மாதரோத்
தனஉடுத் தோற்றம்
சேக்க ரீசனை யொத்ததோண்
போனகஞ் சேறிந்த
கைக்க பாலம தொத்தது
கதிரிளம் பிறையே"

## இளஞ் சைவப்புலவர் சைவப்புலவர் பரீட்சைகள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் நடாத்தப்படும் இளஞ் சைவப்புலவர் சைவப்புலவர் பரீட்சைகள் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் நெல்லியடி வாணிகலா நிலையத்திலும் செப்டம்பர் 25-ம், 26-ம், 27-ம் நாட்களிலும் நடைபெறுமென அறிகின்றோம்,

## உபசரணைவிழாவும் நூல் அரங்கேற்றமும்

இலங்கைச் சாகித்திய மண்டலத்தாரின் காவியப் பரிசில் ரூபா 1000/- பெற்றுக்கொண்ட கவிஞன் இணுவையூர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்களைக் கௌரவிக்கும் முகமாக, இணுவில் மத்திய இந்துசமய வளர்ச்சிச் சங்கத்தார், இணுவில் சனசமூக நிலையத்தார் சார்பில் 25-9-64 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் திரு. வி. தர்மலிங்கம் (பா. ம. உ.) அவர்கள் தலைமையில், இணுவில் கந்தசுவாமி கோயல் மண்டபத்தில் பகிரங்க உபசரணை அளிக்கப்படும். மேற்படி கவிஞருக்குப் பல வித்துவான்கள் பாராட்டுரை வழங்குவார்கள்.

அதன்மேல் அன்னை லவிதாம்பிகை அருட்பேராயிரம் விநாயக மகோற்சவ விளக்கம் ஆகியவற்றின் நூலாசிரியர், வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலை சிரேஷ்டாசிரியர் ஸ்ரீமத், க வை. ஆத்மநாத சர்மா அவர்களால் இயற்றப்பெற்ற ஸ்ரீ. சுப்பிரமணிய புஜங்கம் என்ற நூல் அரங்கேற்றமும் நிகழும்.

## பஜனைப் பாதயாத்திரை

15 - 9 - 64 பஜனைப் பாதயாத்திரையாகப் புறப்பட்ட நல்லூர்ப் பஜனைச் சபையினர் சனிக்கிழமை இரவு திருக்கேதீஸ்வரத்தை யடைந்து பஜனை நிகழ்த்தி 21-9-64-ல் யாழ்ப்பாணம் திரும்பினர். சுமார் நாற்பத்தைந்து அடியார்கள் இப்புனிதப் பாதயாத்திரையிற் கலந்து கொண்டனர்.

செவ்வாய்க்கிழமை புறப்படும் பொழுது நல்லூர் தேவஸ்தான வீதியில சுமார் 500 பக்தர்கள் வழியனுப்பிவைக்க ஸ்ரீமத் சி. எஸ் எஸ். மணிபாகவதர் ஆரம்பித்து வைத்தார். அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்கத் தலைவர் திரு. எஸ். யு. சோமசேகரம், யாழ் - மாநகரசபை அங்கத்தவர் திரு. எஸ். துரைராஜசிங்கம், ஸ்ரீ முருகன் தண்ணீர்ப் பந்தற செயலாளர், திரு. எஸ் கனகசூரியர் ஆகியோரும் சொற்பொழிவாற்றி வழியனுப்பி வைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. வைரவநாதருக்குப் பாராட்டுவிழா



இளைப்பாறிய ஆசிரியர் திரு. க. வைரவநாதர் அவர்களுக்கு சைவபரிபாலன சபைத் தலைவர் திரு த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் ஓர் பாராட்டுவிழா வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மண்டபத்தில் 20-9 64 அன்று நடைபெற்றது. பல அறிஞர்கள் அன்னாரின் சேவையைப் பாராட்டினர். அவருக்கு "சமூகத்தொண்டன்" என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

## பெரிய புராண படன விரிவுரைப் பூர்த்திவிழா

வில்லூன்றி வீரகத்திவினயகராலய மண்டபத்தில் 101 தினங்களாக நடைபெற்று வந்த பெரியபுராண படனமும் விரிவுரைகளும் 20-9-64 ஞாயிற்றுக்கிழமை திருமறை ஓதல், பஞ்சமுகார்ச்சனை, மகேஸ்வர பூசையுடன் நண்பகல் 2 மணியளவில் சிறப்புடன் நிறைவெய்தியது. அன்று மாலை வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலிலிருந்து திருமுறைகள் யானை வாகனத்தில் ஆரோகணித்து முத்துக்குடை கவிக்கச் சாமரை இருமருங்கும் இரட்ட மங்கல வாத்தியத்துடன் கோயிலை வீதிவலமாக வந்து வில்லூன்றி விநயகராலய முன்றிலை அடைந்ததும், திருமறைவேதபாராயணமங்கலம் முழங்க பூசகர் தீபாராதனை செய்து ஆரத்தி எடுக்கபயட்டு ஆலய மண்டப மேடைமீது வைக்கப்பட்டபின் வைத்திய கலாநிதி டாட்டர் க. குருசாமி அவர்கள் தலைமையில் த. குமாரசாமிப்புலவர், கே. பி. ஹரன், வித்துவான் பொன். முத்துக்குமாரன். பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை ஆகியோர் பாராட்டுரைகள் வழங்கினர். சங்கீத பூஷணம் திரு. எஸ். கணபதிப்பிள்ளை அவர்களின் தேவார திருமுறை இன்னிசையும், பிரம்மஸ்ரீ. சி. எஸ். எஸ், மணிபாகவதரின் கதாப்பிரசங்கமும் இடம்பெற்றன

## பாலர் ஞானோதயசங்கம்

ஷை சங்கத்தின் 41 ஆவது வருடாந்தக் கூட்டம் மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாசாலை மண்டபத்தில் 26-9-64 சனிக்கிழமை இரவு 6-30 மணிக்குச் சங்கத தலைவர் பண்டிதர் இ. நமசிவாயம் அவர்கள் தலைமையில் நடைபெறும். சென்ற வருடாந்தக் கூட்ட அறிக்கை. சென்றவருடத் திரட்டறிக்கை படிக்கப்பட்ட பி புதிய உத்தியோகத்தர் தெரிவு நடைபெறும்.

இவ்வாரம் 27-9-64 — 3-10-64

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

பொருள் வரவு, புதுத்தொழில்களில் வெற்றி, உறவினர் பகை, பகைவர்க்குத் தோல்வி, விவசாயத்தில் வெற்றி.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

நிம்மதிக்குறைவு, கலகங்களுக்கு மூந்துதல், சுகக்குறைவு, நிலங்களால் நன்மை, பிறரால உதவி.

**மிதுனராசி** மிருகசிரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

குடும்பக்கலகம், தந்தைவழி உறவினரால் தொந்தரவு, அதிக செலவு, கல்வித் துறையில் வெற்றி.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

குடும்பத்தில் தவறான கருத்துகளுக்கு இடமுண்டு, பொருள் வரவு, நண்பரால் உதவி.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

தொழிற்கஷ்டம், குடும்பக்கலகம், சுகக்குறைவு, வயிற்றுக்கோளாறு, மார்புக்கோளாறு, பொருள் வளர்ச்சி,

**கன்னிராசி** உத்தரம் 2, 3 ; பாதம் அத்தம் சித்திரை 1, 2 பாதம்.

குடும்பத்தில் கலகம், தொழில் அதிகம், பண வரவு உட்பகைவர்களால் தொந்தரவு.

**துலாம்**, சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

கலகங்களுக்கு முந்துதல், தொழிற்கஷ்டம், உட்பகைவர்களால துன்பம், கிழமை முதல் நாளில் கவனம்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

தாயாருக்குச் சுகக்குறைவு, திங்கள் செவ்வாய் எச்சரிக்கை, எஞ்சிய காலம் உகந்தது. பழைய முதலீடுகளால் பயன.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,

பகைவர்க்குத் தோல்வி, தொழில் வளர்ச்சி, புதன் வியாழன் வெள்ளி காலைவரை எச்சரிக்கை, வார இறுதி உகந்தது;

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம திருவோணம் அவிட்டம் 1, 2ம், பாதம்

பொருள் வரவு, தடை நீக்கம், குடும்பத்தில தவறான விளக்கம், வார இறுத இரு நாட்களுக்கு கவனம.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம, சதயம, பூரட்டாதி

சுகக்குறைவு, குடும்பத்தில கலகம, பகைவர்க்குத தோல்வி, பொருள் வரவு.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி. 1, 2, 3ம் பாதம்

குடும்பத்தில கலகம், தொழிற்கஷ்டம, பொருள் வரவு, உட்பகைவர்களால் தொந்தரவு.

# சிவாலயங்கள் செழிக்க வாழ்வு செழிக்கும்

—0—

[வவனிக்குள சிவாலயத் திருப்பணிச் சபையாரால் நடாத்தப்பெற்ற முத்தமிழ்க் கலைவிழாவில் (20-8-64) சேர். கந்தையா வைத்தியநாதன் ஆற்றிய தலைமையுரைச் சுருக்கம்.]

எங்கு எங்கு சைவசமயத்தை வளர்க்க முற்படுகின்றார்களோ அங்கு எல்லாம் என்னால் இயலுமான பணியைப் புரியச் சித்தமுடையேன். பழம் பெரும் சிவாலயத்தைப் புதுப்பித்து முன்னேற்றமடையச் செய்ய நிற்கும் தொண்டர்களாகிய நீங்கள் என்னையும் ஒரு பொருளாக மதித்து இவ்விழாவுக்கு வரவேற்புச் செய்தமையையிட்டு மனம் மகிழ்கின்றேன். சிவத்தொண்டிலேயே பெரும் நோககங்கொண்டு இருக்கும் எனக்கு வேறு கருமங்களிலும் ஈடுபட வேண்டி யிருக்கிறது.

வவனிக்குளத்தின் சிவாலயத்தைப் புனருத்தாரணம் செய்வதற்கு ஒரு திருப்பணிச் சபை அமைத்ததையிட்டு மிகவும அகமகிழ்கின்றேன். வவனிக்குளத்திலும் சிவத்தொண்டர்கள் இருக்கின்றார்கள் என்பதை உலகம் அறியும் பொருட்டு இம் முத்தமிழ்க் கலை விழாவை எடுத்துள்ளார்கள்.

இந்த ஆலயத்தைத்தொழும் பாக்கியம் பெற்றுள்ளேன். அங்கு ஏகாந்த மூர்த்தியாக இருக்கும் சிவலிங்கப்பெருமானை சைவ ஆகம முறைப்படி அமைக்கப்பெற்ற ஆலயத்துள் அமர வைக்க வேண்டியது சைவமக்களனைவரினதும் அரிய பணியாகும். பண்டைக்காலத்தில் எவ்வளவு அருள் பாலித்துள்ளாரோ அதே நிலைக்கு மீண்டும் அப் பெருமானின் திருப்பணியைமுற்றுவிக்கவேண்டும். எங்கும் பரம்பொருளாய் விளங்கும் இறைவன் பழமைபோற் தனது அருள் ஒளியை வீச முற்பட்டுள்ளார். ஆகவே அதற்கேற்ற தொண்டர்களை இப்போது தோற்றுவித்ததும அவரின் கருணையேயாகும்.

இவ்வாலயமும் - சிவலிங்கமும் - ஆவுடையாரும் எல்லாளன் காலத்தில் இருந்தன என்பதற்குச் சற்றேனும் சந்தேகமில்லை. சிவலிங்கத்தின் தோற்றத்திலிருந்து அதன் அருள் பிரவாகத்தைக் காணமுடியும். ஆவுடையாரின் உருவ அமைப்புப்பற்றி ஆராயும் போது மிகப் பழமையான காலத்து ஆவுடையார் என்பதனை அறியலாம். பல்லவர் காலத்து (ம் நூற்றாண்டு) சிவலிங்கங்களையும - ஆவுடையார்களையும தென்னிந்தியாவில காணலாம. இப் பழம் பெரும் அருள படைத்த பரமபொருளுக்கு ஆலயம அமைக்க முறபடுவது சைவத் தமிழ் மக்களின் வளர்ச்சிக்குரிய நல்ல காலமெனறே கூறலாம். 2300 ஆண்டுகளுக்கு முன் புசிக்கப்பட்ட சிவலிங்கம் - ஆவுடையார் மீண்டும் சைவ மக்கள் கையிலே அவர்கள்

சூழ்நிலையிலே கிடைத்தது சைவத் தமிழ் மக்கள் செய்த அரும் புண்ணியமே யாகும்.

### பாலிநகர்ச் சிவாலயம்

சிவாலயம் வளர்ச்சிபெற தமிழ் மக்கள் வாழ்வு-பொருளாதார நிலை என்பன உயர்வுபெறும். இவ் வவனிக்குளத்தை ஆட்சி செய்துவரும் பெருமானுருக்குச் சிறந்த ஆலயத்தை அமைத்து கும்பாபிஷேக விழா நடத்தவேண்டியது இலங்கையிலுள்ள சைவ மககளின் தலையாய கடனாகும். இலங்கையின் இந்துமகாசபைத தலைவர் என்ற முறையிலே இவ் வேண்டுகோளைச் சமர்ப்பிக்கின்றேன்.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்றவாறு சிவன் எல்லாம் இடங்களிலும் பிரகாசிக்கின்றார்.

பாலி நகர்ச் சிவாலயத் திருப்பணி வெகு விரைவில முட்டின்றிமுடிய திருக்கேதீஸ்வரப் பெருமான் அருள்பாலிப்பாராகுக.

சிவலிங்க வழிபாடு சைவத்தின் தொன்மையை நன்கு விளக்கும். சைவமக்கள் சிவதீட்சை பெற்று 10 தேவாரங்களாவது பாடப்பண்ணவேண்டும். சமயத்தோடு கலந்த கல்வியை மாணவர்களுக்கு ஊட்ட வேண்டும்.

கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியாகிய இறைவன் திருவீழி மலையில் வீற்றிருந்து காட்சி தருவதுபோல வவனிக்குளத்திலும் வீற்றிருந்து காட்சி தருவார். இந்த உடைந்த நிலையில் ஆவுடையாரை நோக்கும் போது அதன் பழமையை எண்ணியபொழுது என் உள்ளம் குளிருகின்றது. சிறந்த ஆலயம் அமைக்கப்பெறுவதை எண்ணும்போது என்கண்கள் குளிர்ந்தன. இந்த ஆவுடையார் சதுரவடிவமாக இருக்கின்றது. அருள் சொரியும இடம் சதுரம். மனச்சாந்தி—உண்மை என்பனவற்றைச் சிவலிங்க மூலம் அறியலாம். சாந்தி வடிவம் சிவலிங்கம்.

ஆகவே வவனிக்குளத் திருப்பணிச்சபையார் பாலிநகர்ப் பெருமானுக்குச் சிறநத ஆலயம் அமைப்பதற்கு எலலா அன்பர்களும உதவிபுரிந்து தமிழனின் பண்டைய பழம் பெருமையைப் பாதுகாப்போமாக.

## சைவாதீன மகாநாடு

ஸ்ரீலங்கா சைவாதீன மகாநாடு செப்டம்பர் 26-ம், 27-ம் நாட்களில் கீரிமலை வைத்திலிங்க மடத்தில நடைபெறும். நாவலன் அரங்கு, காவலன் அரங்கு, பாவலன் அரங்கு, நாகையன் அரங்கு ஆகிய அரங்குகளில் பிரபல சைவக் குருமார் தலைமையில் நடைபெறும். ஷை சைவாதீன மகாநாட்டில் பல சைவ அறிஞர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

## (இந்துசமயம்) மாதிரி வினாவிடை

1-ம் பக்கத் தொடர்ச்சி

தீமைகளை உண்டாக்கும். இவை கூடாவொழுக்கத்தின் குற்றங்களாகக் கருதப்படுவன.

அகத்திலே துறவில்லாது புறத்துறவு பூண்டு பிறரை வஞ்சிப்பவர் மிகவுங் கொடியவர்களாவர் இவ்வாறு அகத்தே அறியாமையையும் புறத்தே தவ வேடத்தையும் கொண்டு வாழ்கின்றவர்களைக் கொண்டுள்ளது இவ் வுலகம். துறவறத்தாருட் பலர் உள்ளத்தைச் சுத்தமாக்க முயலாது உடலைச் சுத்தி செய்ய முயலுகின்றனர் இவை கூடா வொழுக்க முடையவரிடத்துள்ள பெருங் குற்றமாகும். எனவே இக்குற்றமுடையாரை அறிந்து நீக்கிக் கொள்ள வேண்டுமென்பது கருத்து.

அம்பானது வடிவத்தால் நேரிதாக இருக்கிறது. ஆனால் அதன் செயலோ கொடியது. யாழானது வடிவத்தால் கோணலாக உள்ளது. செயலாலோ இனியதாக இருக்கின்றது. இது போனறே நல்லவர் கெட்டவர் என்பதை அவரவர் செயலைக்கொண்டு அறிய வேண்டுமேயன்றி உருவத்தால் அறியக்கூடாதென்று துறவிகளை யறியும் வழியும் காட்டப்படுகின்றது.

எனவே, உயர்ந்தோர் குற்றமென்று கூறுவனவற்றை விட்டொழுகுதலே தவத்தோர்க்குச் சிறப்பாவதென்றும், அங்ஙனம், உண்மைத் தவநெறியில் நிற்பார்க்கு வெளிவேஷமும் வேண்டா வென்று கூறி அவர்களது சிறப்பு இறுதியாகக் கூறப்படுகின்றது.

எனவே, கூடா வொழுக்கமென்னும் அதிகாரத்தால், கூடா வொழுக்க முடையவரிடத்துள்ள குறறமும், அக்குற்ற முடையவர்களை அறிந்து நீக்கிக் கொள்ளவேண்டுமென்பதும், அவர்களை அறியும் வழியும், தவஞ்செய்வார்க்கு வேஷமும் வேண்டாவென்று அவரது சிறப்பும் கூறப்பட்டன.

(தொடரும்)

## சிதம்பரம் சிவபுரிமடத் தம்பிரான் சிவபதமடைந்தனர்

சிதம்பரம் சிவபுரிமடத் தம்பிரானுகச் சென்ற 30 வருடகாலம் கடமையாற்றி வந்த ஸ்ரீமத் சுந்தர நாயகம் செட்டியார் சுப்பிரமணிய தம்பிரான் அவர்கள் 17-9-64 ல் சிதம்பரத்தில் சிவபதமடைந்தனர். ஆராலி மேற்கிலுள்ள சிவபுரி மட வளவில் வசித்து, சிதம்பரத்திலுள்ள சிவபுரிமடத்தையும் அங்குள்ள சொத்துக்களையும் யாழ்ப்பாணத்திலுள்ள சொத்துக்களையும் பரிபாலித்து வந்தவர். சிவபுரிமடத்தைக் கிரமமாகவும் பக்திசிரத்தையுடனும் பரிபாலித்துத் தில்லை நடராசருக்கு விசேட கட்டளைகளும் விழாக்களும் நடத்தி வந்த சைவப்பரம்பரையைச் சேர்ந்தவர். சடுதியாக நோயின்றிக் காலமாய் விட்டார். ஷை சிவபுரிமடத் தருமகர்த்தாக்களுக்கு எங்கள் அநுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரதம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

''வேண்டத்தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டு யமன்பாற கரியோய்நீ
வேண்டியென்னைப் பணி
கொண்டாய்
வேண்டிநீ யாதருள் செய்தால்
யானுமதுவே வேண்டினல்
வேண்டும் பரிசோன் [லால்
றுண்டேன்னில் அதுவும
உன்றன் விருப்பன்றே''.

''விரதமெல்லா மாண்ட
மனத்தார் மனத்தான்
கண்டாய்''.

''இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின் வேண்டு
கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை
யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டுநான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போது
உண்னடியின் கீழிருக்க
வேன்றார்''.

எனனும் திருவருட்பாக்கள் இங்கு உற்று நோக்குதற்குரியன, விரதம் அனுட்டிப்போர் நல்லொழுக்கமுடையராய் இருத்தல் வேண்டும், உலக இன்பங்களைச் சிறிது சிறிதாகவிட முயற்சி செய்தல் வேண்டும். உலக ஆசை ஒழிந்தவிடத்துத்தான் பிறப்பு நீங்கும். பிறப்பு நீங்கிய வழியே முத்தி சித்திக்கும். ''பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம பொருள் காண்ப தறிவு'' என்பது பொய்யாமொழி. ''பிறவி வேரறுத் தென்குடி முழுதாண்ட பிஞ்ஞகா'' என்னும் மணிவாசகமும் இக் கருத்தையே விளக்காநிற்கும். ஒவ்வொருவரும் தாம் தாம் என்னென்ன தீச்செயல்களுக்கு உறைவிடமாக இருந்து வாழ்நாளை வீணாளாகக் கழிக்கிறார்களென்பதைத் தம்முள்ளேயே காரணகாரியத்துடன் ஆராய்ந்தறிந்து அக்குற்றங்களினின்றும் விலக உபாயந் தேட வேண்டும்.

முடிவுரை

விரதத்துக்கு முக்கிய அம்சம் அருளுடைமையென்று மேலே கண்டறிந்தோ மாத

## உரும்பராயில் திருமுறை இசைவிழா

''திருமுறைகள் தமிழர்களது அரிய இனிய பொக்கிஷங்கள். அவற்றைக் கருத்துப்பிசகாமல் ஏற்ற பண்ணுடன் பாடுதல் வேண்டும். அவ்வாறு மரபு பிறழாமல் பாடத்தக்க இலக்கணஞர், இசைப்புலவர் திரு. சி. செல்லத்துரை அவர்கள்தான்'' என்று உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலில் சென்ற வியாழக்கிழமை இரவு நடைபெற்ற திருமுறை இசைவிழாவில் ஆசிரியர் திரு அ பஞ்சாட்சரம் கூறினார். இவ்விழா உரும்பராய் இந்துசமய அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவின் கீழ் நடைபெற்றது.

சந்திரோதய . வித்தியாசாலை ஆசிரியர் திரு. க. பாலசுப்பிரமணியம் இசைப்புலவர் செல்லத்துரை அவர்களுக்கு மலர் மாலையிட்டு வரவேற்று உபசாரம் செய்து கௌரவித்தார்கள்.

உரும்பராய் கருணாகரப்பிள்ளையார்மீது முதலில் தோத்திரங் பாடிய இசைப்புலவரவர்கள் திருமுறைகளை ஒழுங்காகவும் பக்தி பரவசத்துடனும் மரபு பிறழாமலும் பண்ணுக்கிசைபப்பாடி மக்களை மூன்று மணித்தியால நேரம் அருட்கடலில் ஆழ்த்திவிட்டார்கள்.

லால் நாம் அதை நன்றாக வளர்க்க முயற்சி செய்ய வேண்டியது பெருங்கடனும். பண்டைக்காலத்தில் விளங்கிய இரந்திதேவர் என்னும் அரசர் நாற்பத்தெட்டு நாள் விரதம் அனுட்டித்து அருளுடைமையாகிய இவ்விரதத்தையே சிவபிரானிடம் வேண்டிப்பெற்றார்.

அருளுடைச் சுடரே
யளிந்ததோர் கனியே
பெருந்திறலருந்தவர்க்கரசே
பொருளுடைக் கலமே
புகழ்ச்சியைக் கடந்த போகமே
யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார்
சிந்தையுட் புகுந்த செல்வமே
சிவபெருமானே
இருளிடத் துன்னைச்
சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே

[இவ்வரிய கட்டுரை ''சைவ லகுலேகம்'' என்னும் துண்டுப் பத்திரிகை வாயிலாக முதன் முதல் வெளிவந்தது. பின்னர் 1921-ம் ஆண்டில் சென்னையிவிருந்து பிரசுரமான ''சைவம்'' என்னும் மாதப் பத்திரிகையில் மறு பிரசுரஞ் செய்யப்பட்டதாகும்.]


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில்; யாழ்ப்பாணம் பிறவுண்வீதி 2-ம் ஒழுங்கை இலக்கத்தில்வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 25-9-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M,B. 4936.
யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
உடையார் வளவு உரும்பிராய்
1. S. இராசரத்தினமும்
2. பெண் யோகலட்சுமியும்
—வழக்காளிகள்
எதிராக
இராசாவின் தோட்டம், ரோட்டு, யாழ்ப்பாணம்
1. வல்லிபுரம் சின்னத்தம்பியும்
2. பெண் செல்லம்மா
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M.B. 4936-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1964-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 14-ம் திகதி (14 - 11 - 64) சனிக்கிழமை பிற்பகல் 4மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 7850/- இன்னும் ரூபா 5000-க்கு 13-6-62 தொடக்கம் 20-12-62 வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும் பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 312/- சதம் 50. இதில் ரூபா 525 கொடுபட்டது

காணி விபரம்:

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை ''இக்கிரிதோட்டம்'' பர.நில.இலா, $3\frac{1}{2}$ கட்டிடங்களும், வடக்குப்பக்கத்திலிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் சொல்லப்பட்ட $3\frac{1}{2}$ பரப்பின் எல்லை கிழக்கு தம்பிராசா சின்னத்தம்பியினுதனம், வடக்கு தம்பு தம்பிப்பிள்ளையினுதனம், மேற்கு இராசாவின் தோட்டம் ரோட்டு, தெற்கு சிமான்பிள்ளை ஆசிர்வாதத்தின் ஆதனம் இதடங்கலும். அதைச் சேர்ந்தவைகளும்

தா, செல்லையா,
கொமிசனரும்,விலைமதிப்பாளரும்
இல: 37. கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
M. 167 25-9-64

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டிலே
ஊரெழு, சதாசிவம் விஞசித்தம்பி
—வழக்காளி
வழ. இல: M,B. 4216
எதிராக
திருநெல்வேலி
கனகசபை வேலாயுதபிள்ளை
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4216-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ் காணப்படும் இருதுண்டுக்காணிகள் 1964-ம் ஆ அக்டோபர்மீ 31உ (31-10-64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அவ்வக்காணிகளுக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 7666-66. இன்னும் ரூபா 5000-க்கு 29-8-61 தொடக்கம் 2-4-63 வரை 11 வீத வட்டியும் கூடிய தொகைக்கு 2- 4 - 63 தொடக்கம் இறுக்கும் வரையும் 5வீத வட்டியும் கோட்டுசசெலவு ரூபா 280/75-ம்.

காணிகளின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க்கோவிற்பற்று திருநெல்வேலி இறை ''திசைவீரசிங்கன் ஆராச்சி வளவு'' நில, பர. (2) இரண்டும் கல்வீடும் கிணறும் பயிர்வகைகளும். இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு ஈடு கொடுககற்காரரினு தனம். மேற்கு தம்பு கல்லையாவினுதனம் தெற்கு ஈடுகொடுக்கற்காரனுக்கும் கார்த்திகேசு கனகசபைக்குமுரிய ஆதனம், இதடங்கலும்.

2. ஷ திருநெல்வேலி இறை ''திசைவீரசிங்கன் ஆராய்ச்சி வளவு'' நில. பர. 1, பயிர்வகைகளும் தெற்கெல்லையில் இருக்கும் கிணறும், இதற்கெல்லை கிழக்கு ஈடுகொடுக்கற்காரனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு நல்லையா இரத்தினத்தினு

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M,B. 5756
1. ச,க, துரைசிங்கமும் மனைவி
2. வேதவல்லி,
கண்டிரோட்டு.
சுண்டிக்குளி - யாழ்ப்பாணம்
—வழககாளிகள்
எதிராக
1. முருகேசு நாகலிங்கம்,
16, பண்ணை ரோட்டு,
வண்ணார்பண்ணை மேற்கு,
யாழ்ப்பாணம்.
2. கறிவாக்ஸ் ஜயதேவ,
காங்கேசந்துறை ரோட்டு.
யாழ்ப்பாணம்.
—எதிரிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு M. B, 5756-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் காணி 1964-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31-ம்திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்

தீர்வைத் தொகை:- ரூபா 24,910-ம், 17-6-63 தொடககம் 16 - 1 - 64 வரையில் ரூபா 20,000-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் பணம் முற்றாக இறுபடும் வரையில் முழுக்கூட்டுத தொகைக்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவால் ரூபா 200 கொடுபட்டது. மிகுதிச் செலவுப் பணம் விடப்பட்டது.

ஆதனடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கிறை ''சிமாதிடலும் திருவளர்திடலும்'' நெற்பரப்பு லாச்சம் $5\frac{1}{2}$ யும், வீடும், குடிசைகளும், கிணறும் அதைச்சேர்ந்தவைகளும், இக்காணிக்கு எல்லை கிழக்கு K, குமாரசாமியின் ஆதனம், வடக்கு விஞசித்தம்பி சின்னையாவினதும் பங்காளர்களினதும் ஆதனம், மேற்கு ரோட்டு, தெற்கு கநதப்பர் வயித்திலிங்கம் பெண் சிவபாக்கியத்தின் ஆதனம்.

க, செல்வத்துரை,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
''முருகன் இல்லம்''
இணுவில், 15-9-64.
M 168 25-9-64

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வண்ணார்பண்ணை கிழக்கு
1. அருணம்பலம சோமஸ்சந்தா
2. பெண் கவுரி அம்மா
—வழக்காளிகள்
எதிராக
வண்ணார்பண்ணை கிழக்கு
1. செல்லத்துரை இராசரத்தினம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M.B. 5064-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1964-ம் வூ ஐப்பசு மீ 31 உ சனிக்கிழமை 31-10-64) முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசிதத ஏலத்தல் விற்கப்படும்.

தீர்வைதொகை:-முதல்வட்டி ரூபாய் 1670-ம், 10-9-62தொடககம் 18-3-1963 வரைக்கும் ரூபாய் 1000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைககும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 206/52

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக்கோவிறபற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை ''முத்தியன் வளவு புன்னன் பெருமாள் வளவும் தூலன் வளவு'' நிலப்பரப்பு 2 குளி 6, கல்வீடும் கிணறும், கிணறு நிந்தமாக எதிராளிககுரியது, செய்பயிர்களும், எல்லை கிழக்கு பொன்னம்பலம் சங்கரப்பிள்ளைககுரிய ஆதனம், வடக்கு செல்வ

தனம், மேற்கு ரோட்டு, தெற்கு ஈடுகொடுக்கற்காரனுக்கும் சங்கரப்பிள்ளை ஆசையப்பமுதலியினுதனம். இதடங்கலும்.

S. இரத்தினசபாபதி,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
ஸ்ரேசன் ரோட்,
கோண்டாவில் மேற்கு.
கோண்டாவில், 23-9-64.
M. 170 25-9-64.

## ஆசிரியருக்கு அஞ்சலி

கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்திலும் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையிலும் நீண்டகாலம ஆசிரியராகக் கடமையாற்றிய மஹாகம் திரு' க. சபாபதி அவர்கள் சென்ற வியாழன் இரவு மானிப்பாய் வைத்தியசாலையில காலமானதை முன்னிட்டு அடுத்தநாள் வெள்ளிக்கிழமை உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் ஆசிரியரும் மாணவர்களும் அன்னாரின் ஆன்ம சாந்தியின் பொருட்டுப் பிரார்த்தனை நடத்தினர்,

ஆசிரியர்களும் மாணவர்களும் திரு. க. சபாபதி அவர்களது இல்லம் சென்று மலர்வளையம் வைத்துத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தி அன்னாரின் குடும்ப வளர்ச்சிக்குப் பண முடிப்பும் வழங்கினர். ஆசிரியர்கள்சார்பில் தலைமையாசிரியர் திரு. சி. பொன்னுத்துரை அவர்கள் அவருடைய சேவையைப் பாராட்டினர்.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழககு ஆறுப்பிள்ளை சின்னத்துரை -வழககாளி,
இல, M B 5604
எதிராக
யாழ்ப்பாணம், மானிப்பாய்
கனகரத்தனம் நவரத்தினராசா
-எதிராளி,

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M B 5604 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1964ம் வூ ஒக்ரோபர்மீ 31ம் உ (31-10-64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 13,987-00ம் 29-4-63 தொடக்கம் 24-4-64 வரைக்கும் ரூபா 10,000 க்கு 11 வீத வட்டியும் அதன் பின் முழுதொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 534-20ம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று மானிப்பாய் இறை 'பொககனேடை வளவும் வேடுவன் கண்டியும் சாலமறையன் திடலும்'' தற்போது ''ரேஸ் மால்'' என வழக்கப்படும் ஆதனம். உறுதிப்படி நில. பர 15 குளி $6\frac{1}{4}$, ஆறைல் உததரவுபெற்ற சேவையர் எஸ். முத்துக்குமாரசுவாமியால் 1958ம் ஆ ஏப்பிரல்மீ 13ம் உ அளந்து தயாரிககப்பட்ட 1117ம் இலக்க அளவுப் படத்தின்படி நில. பர, 16 குளி 10. இதல் வடக்குப்பக்கமாக நிந்தமாய் நில. பர, 4ம் வீடும் மற்றும் கட்டிடங்கள் பயிர் வகைகள் முழுவதும் மிகுதிக் காணிக்குளிருககும் கிணற்றிற் பங்கும். இந்தநிலப்பரப்பு நாலுக்கும் எல்லை கிழக்கு ரோட்டு. வடக்கு நமசிவாயம் செலவத்துரையினுதனம். மேற்கு முத்து நயினார் கோவிலுக்கும் சுப்பர் முருகேசுவின் உரிமைக்காரருக்குமுரிய ஆதனம் தெற்கு ஈடுவைத்த கனகரத்தினம் நவரத்தினராசாவுக்குரிய மிகுதி ஆதனம்.
E 341/231 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

அ. வெற்றிவேலு,
கொமிஷனர்.
19. வேம்படி வீதி.
யாழ்ப்பாணம்,
M. 171 25-9-64.

ராசா பெண் நித்திய இலட்சுமிக்குரிய ஆதனமும், மாரிமுத்து சபாபதிக்கு முரிய ஆதனமும், மேற்கு காங்கேசன் துறை ரோட்டு. தெற்கு கார்த்திகேசு கைம்பெண் தங்கத்துக்குரிய ஆதனம். பதிவு இலக்கம் D 250/300. இதடங்கலில் சொரியலாய் 9/10 பங்கும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்,
சித்தங்கேணி
21-9-1964.
M 169 25-9-64.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org